202 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7, இலங்கை
தொ.பேசி: 94-11-2580840
தொலை நகல் 94-11-2580698
இணையத்தளம்: www.unfpa.org

# பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாரபட்சம் காட்டலையும் தடுத்து நிறுத்துவதற்கான அமைப்பு

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் - இலங்கை

## உள்ளடக்கம் — பக்கம்


| | | |
|---|---|---|
| 1 வது | - உறுப்புரை பாரபட்சம் காட்டலை நிறுத்துவோம் | 3 |
| 2 வது | - உறுப்புரை பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டலை இல்லாதொழிக்கின்ற கொள்கையைக் கடைப்பிடிப்போம். | 4 |
| 3 வது | - உறுப்புரை சமத்துவத்தின் அடிப்படையில் பெண்களின் மனித உரிமைகளை உறுதி செய்தல் | 6 |
| 4 வது | - உறுப்புரை தற்காலிக விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 7 |
| 5 வது | - உறுப்புரை பாலியல் வகிபாகமாக மாற்றமடையாதுள்ள நிலையையும் தப்பபிப்பிராயத்தையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 8 |
| 6 வது | - உறுப்புரை பெண்களின் வஞ்சக் கடத்தலையும் விபச்சாரத்திற்காக பெண்களைச் சுரண்டுதலையும் நிறுத்துதல | 9 |
| 7 வது | - உறுப்புரை பெண்களின் அரசியல் உரிமையை உறுதி செய்தல் | 10 |
| 8 வது | - உறுப்புரை சர்வதேச மட்டங்களில் பங்குபற்றுவதில் ஆண்களுடன் பெண்களுக்கும் சம வாய்ப்பளிப்பதை உறுதி செய்தல் | 11 |
| 9 வது | - உறுப்புரை தேசியத்துக்கும் பிரசாவுரிமைக்குமான உரிமையை உறுதி செய்தல் | 12 |
| 10வது | - உறுப்புரை சமத்துவமான கல்விவாய்ப்புகளை உறுதிசெய்தல் | 13 |
| 11வது | - உறுப்புரை தொழில் வாய்ப்புகளில் சம உரிமையை உறுதி செய்தல் | 15 |
| 12வது | - உறுப்புரை சுகாதார உரிமையை உறுதி செய்தல் | 17 |
| 13வது | - வாசகம் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கைகான உரிமையை உறுதி செய்தல் | 18 |
| 14வது | - உறுப்புரை கிராமிய பெண்களின் சம உரிமை உறுதிசெய்தல் | 19 |
| 15வது | - உறுப்புரை சட்டத்தின் முன் சமத்துவம் அளித்தல் | 21 |
| 16வது | - உறுப்புரை திருமணம் மற்றும் குடும்ப வாழ்வில் சமத்துவம் | 22 |







## 1 வது - உறுப்புரை பாரபட்சம்காட்டலை நிறுத்துவோம்

“பெண்களுக்கு எதிரான பாரபட்சம்காட்டல்” என்பது திருமணமான அல்லது திருமணமாகாத நிலைமையை பொருட்படுத்தாது பால்நிலை சமத்துவத்தின் அடிப்படையில் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் அல்லது வேறேதேனுமொரு துறையில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை பெண்கள் ஏற்றுக்கொள்வதை, அனுபவிப்பதை அல்லது பிரயோகிப்பதை பலவீனப்படுத்துகின்ற அல்லது வலுவற்றதாக்குகின்ற நோக்கத்துடன் பால் அடிப்டையில் ஏதேனுமொரு விதத்தில் பாரபட்சம்காட்டுதல், விலக்கி வைத்தல் அல்லது மட்டுப்படுத்தலாகும்.

*“சமத்துவம் மற்றும் சம பாதுகாப்பு பற்றிய கொள்கைகளின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளவாறு, பெண்களுக்கு எதிராக நடைபெறுகின்ற அனைத்து விதமான துன்புறுத்தல்கள் அவர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற பாரபட்சம்காட்டல்களாகக் கருதப்பட்டு செயலாற்றப்படுதல் வேண்டும்.”*

*- **ரீடா மன்ஜோ,** பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பிலான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்*




## 2 வது - உறுப்புரை பெண்களுக்கு எதிரான பாரபட்சம்காட்டலை இல்லாதொழிக்கின்ற கொள்கையைக் கடைப்பிடிப்போம்.

- பால்நிலை சமத்துவம் பற்றிய கோட்பாடுகளை தமது யாப்பில் அல்லது ஏற்படைய வேறு கட்டளைச் சட்டங்களில் சேர்த்துக்கொள்ளல்.
- சட்டம் மற்றும் ஏனைய பொருத்தமான வழிமுறைகளின் கீழ் பால்நிலை சமத்துவக் கோட்பாடுகளை நடைமுறைச்சாத்தியமான விதத்தில் நிறைவேற்றிக்கொள்வதை உறுதிசெய்தல்
- பெண்களுக்கு எதிரான அனைத்து விதத்திலுமான பாரபட்சம்காட்டலைத் தடைசெய்து, தேவையான விடத்து தகுந்த தண்டனைகள் உள்ளடங்கிய பொருத்தமான சடட்டங்களையும் ஏனைய வழிமுறைகளையும் நிறைவேற்றிக்கொள்ளல்
- ஆண்களுக்கு சமமானவிதத்தில் பெண்களின் உரிமைகளுக்கும் சட்டரீதியிலான பாதுகாப்பை வழங்குதல்
- பெண்களுக்கு எதிரான எவ்விதத்திலுமான பாரபட்சம்காட்டும் செயல்களிலிருந்தும் தவிர்ந்து தகுந்த பாதுகாப்பைப் பெறும் உரிமையை உரிய அதிகாரங்களைக் கொண்ட தேசிய நியாயத்தீர்ப்பு சபைகள் மற்றும் ஏனைய பொதுநிறுவனங்களின் ஊடாக உறுதிசெய்தல்.
- பெண்களுக்கு எதிரான பாரபட்சம்காட்டல்கள் உள்ளடங்கிய சட்டங்கள் ஒழுங்குவிதிகள், மரபுகளைத் திருத்தியமைத்தல் அல்லது இரத்துச் செய்யும் பொருட்டு சட்டங்களை ஆக்குதல் உள்ளிட்ட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.



- ஏதேனுமொரு நபர், அமைப்பு அல்லது தொழில்முயற்சியால் பெண்களுக்கு எதிராக நடைபெறும் பாரபட்சம்காட்டலை இல்லாதொழிப்பதற்காக பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- பெண்களுக்கு எதிரான பாராபட்சம்காட்டல்களுக்கு ஏதுவாயமைகின்ற அனைத்து தேசிய தண்டனைமுறைச் சட்ட ஏற்பாடுகளையும் இரத்துச் செய்தல்.




## 3 வது - உறுப்புரை சமத்துவத்தின் அடிப்படையில் பெண்களின் மனித உரிமைகளை உறுதி செய்தல்

ஆணுடனான சமத்துவத்தின் அடிப்படையில் பெண்களின் மனித உரிமைகளும் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்குத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசாரத் துறைகளில் பெண்களின் முழுமையான மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளுதல் வேண்டும்.






## 4 வது - உறுப்புரை தற்காலிக விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவத்தை உருவாக்குகின்ற நடைமுறைகளைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான தற்காலிக விசேட நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளல் வேண்டும். பால்நிலை சமத்துவத்தை அடையப்பெறுவதை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அத்தகைய நடவடிக்கைகள் தற்காலிகமாக ஆண்களை விட பெண்களுக்கு சாதகமாக அமையுமிடத்து அல்லது வித்தியாசமான தராதரங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து அவை பாரபட்சம்காட்டுதலாக அமையாது.

*"கௌரவத்துடனும், பிறர்மீது தங்கிவாழ்வதிலிருந்து விடுபட்டு, அச்சமின்றி வாழ்வதற்கான உரிமை பெண்களுக்கு உண்டு. இதனை யதார்த்தமாக்குவதற்கு மீள்அர்ப்பணிப்புடன் நாம் செயற்படுவோம்"*

*- **கொபி அன்னான்,** ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம்*




## 5 வது - உறுப்புரை பாலியல் வகிபாகமாக மாற்றமடையாதுள்ள நிலையையும் தப்பபிப்பிராயத்தையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

பின்வருபவை தொடர்பில் அரசு தகுந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(அ) சமூக மற்றும் கலாசார வாழ்வில் பாரபட்சம்காட்டலை இல்லாதொழித்தலும், அதன் பொருட்டு பெண்களின் தாழ்வு மனப்பான்மை அல்லது மாறாத்தன்மை தொடர்பிலான எண்ணங்களின் அடிப்படையிலான தப்பபிப்பிராயம், மரபுகள் மற்றும் ஏனைய பழக்க வழக்கங்களையும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்,

(ஆ) தாய்மையை சமூகச் செயற்பாடாகக் கருதுதல், தமது பிள்ளைகளை வளர்த்தெடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆணினதும் பெண்ணினதும் பொதுப் பொறுப்பாகும் என்பதை அங்கீகரித்தல், அனைத்து விடயங்களிலும் பிள்ளைகள் தொடர்பிலான ஆர்வம் ஆதியிலிருந்தே உள்ளதென்பதைக் கருதுதல் உள்ளடங்கிய குடும்பக் கல்வியை உறுதிசெய்தல்.

*"தப்பபிப்பிராயங்களைச் சட்டங்களால் ஒழிக்க முடியாத போதிலும், சட்டங்களின் மூலம் எமது செயல்களுக்கான வழிகாட்டல்களை அமைக்க முடியுமென்பதை நான் அறிவேன்."*

*- **பெல்வா ஆன் லொக்வூட்***






## 6 வது - உறுப்புரை பெண்களின் வஞ்சக் கடத்தலையும் விபச்சாரத்திற்காக பெண்களைச் சுரண்டுதலையும் நிறுத்துதல

பெண்களின் வஞ்சக் கடத்தலையும் விபச்சாரத்திற்காக பெண்களைச் சுரண்டுதலையும் ஒடுக்குவதற்காக அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

*"எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எவ்விதத்திலும், எந்தவொரு அரசியல் கட்சியினாலும் அல்லது அரசாங்கத்தினாலும் பெண்களுக்கு எதிராக நடைபெறுகின்ற துன்புறுத்தல்களை சகித்துக்கொள்ளலாகாது. அதனை ஒழிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுசேர்தல் வேண்டும்."*

*- **பங் கீ மூன்,** ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம்*




## 7 வது - உறுப்புரை பெண்களின் அரசியல் உரிமையை உறுதி செய்தல்

அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம்காட்டலை இல்லாதொழித்தல் குறிப்பாக பின்வரும் உரிமைகளை உறுதி செய்வதற்கும், பெண்களின் அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் பாரபட்சம்காட்டலை இல்லாதொழிப்பதற்கும் அரசு நடவடிக்கையெடுத்தல் அவசியமாகும்.

- அனைத்துத் தேர்தல்களிலும் மற்றும் பொதுக் கருத்துக் கணிப்பிலும் வாக்களித்தல்
- பகிரங்கமாகத் தெரிவுசெய்யப்படுகின்ற நிறுவனங்களுக்கான வாக்கெடுப்புகளுக்கு தகுதி பெறல்
- அரச கொள்கைகளை வகுத்தல் மற்றும் அமுலாக்கலில் பங்குபற்றுதல்
- அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் பொதுப் பதவிகளை வகித்தலும் பொது அலுவல்களில் ஈடுபடலும்
- அரச சார்பற்ற மற்றும் சிவில் சமூக அமைப்புகளில் பங்கேற்றல்.

*"சட்டங்களை ஆக்குதல் மற்றும் சட்டவாக்க சபையினரைத் தெரிவு செய்வதற்கு பெண்கள் உதவியளிக்காதவரை ஒருபோதும் முழுமையான சமத்துவம் உருவாகாது."*

***- சுசான் பி. அந்தனி***






## 8 வது - உறுப்புரை சர்வதேச மட்டங்களில் பங்குபற்றுவதில் ஆண்களுடன் பெண்களுக்கும் சம வாய்ப்பளிப்பதை உறுதி செய்தல்

- சர்வதேச மட்டங்களில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் சர்வதேச அமைப்புகளின் பணிகளில் பங்குபற்றுவதற்கும் பெண்களுக்கு சம வாய்யப்பளிப்பதை அரசு உறுதி செய்தல் அவசியமாகும்.




## 9 வது - உறுப்புரை குடியுரிமை பிரசாவுரிமைக்குமான உரிமையை உறுதி செய்தல்

- பெண்களின் குடியுரிமை மற்றும் அவர்களது பிள்ளைகளின் குடியுரிமை தொடர்பில் ஆண்களைப் போன்று பெண்களுக்கும் சம உரிமை உள்ளதென்பதை அரசு உறுதி செய்தல் அவசியமாகும். குறிப்பாக பெண்ணின் தேசியத்துவம் அவளது கணவனின் தேசியத்துவத்தின் மீது தீர்மானிக்கப்படுதலாகாது.

*"பெண்ணென்ற வகையில் எனக்கு ஒரு நாடு கிடையாது. பெண்ணென்ற வகையில் எனது நாடு முழு உலகமுமாகும்."*

***- வர்ஜினியா வூல்ப்***






## 10 வது - உறுப்புரை சமத்துவமான கல்விவாய்ப்புகளை உறுதிசெய்தல்

கல்வியில் பாரபட்சம்காட்டுதலை இல்லாதொழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். குறிப்பாக பின்வரும் துறைகள் தொடர்பாக அரசு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- கல்வியின் அனைத்து மட்டங்களிலும் சேர்வதற்கும் டிப். லோமா பெறுவதற்குமான சமத்துவம்
- பாடத்திட்டம், கற்பித்தல் மற்றும் பாடசாலை வசதிகளில் சமத்துவம்
- கற்பித்தலில் பாஸ்நிலை அடிப்படையிலான மாறுதலற்றதன்மையினை இல்லாதொழித்தல்
- புலமைப் பரிசில்கள் மற்றும் மானியங்கள் வழங்குவதில் சம வாய்ப்புகள்
- கல்வியைத் தொடருவதற்கான சம வாய்ப்பும் கல்வியில் பால்நிலை அடிப்படையிலான இடைவெளியை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களும்
- பெண்கள் கல்வியை இடைநடுவில் கைவிடுகின்ற வீதத்தைக் குறைத்தல் மற்றும் பாடசாலையைவிட்டு நீங்குகின்ற பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- விளையாட்டுக்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வியில் சம வாய்ப்புகள்
- குடும்பநலன் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய திட்டவட்டமான தகவல்களைப்
  பெறுவதற்கான வாய்ப்புகள்

*"ஒருஆண் கற்கும்போது ஒரு தனிநபர் கற்கிறார். ஒருபெண் கற்கும்போது ஒருகுடும்பமே கற்கிறது."*

***- ஏ. கிரிப்ஸ்***






## 11 வது - உறுப்புரை தொழில் வாய்ப்புகளில் சம உரிமையை உறுதி செய்தல்

தொழில் வாய்ப்புகளில் பாரபட்சம்காட்டலை இல்லாதொழிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல் அவசியமாகும். குறிப்பாக பின்வரும் உரிமைகள் தொடர்பில் ஆணைப் போன்றே பெண்ணுக்கும் சமஉரிமை உள்ளதென்பதை அவை உறுதி செய்தல் வேண்டும்.

- வேலைகளில்
- தொழில்வாய்ப்புகளிலும் தொழில்வாய்ப்புகளுக்கு தெரிவு செய்யப்படுவதிலும்.
- உயர்தொழிலைத் தெரிவு செய்வதில்.
- பதவி உயர்வுகள், தொழில் பாதுகாப்பு மற்றும் நலவுரிமைகள்
- தொழிற்பயிற்சி
- சமபெறுமானமுடைய வேலைகளுக்கு சம சம்பளம்
- சமூகப் பாதுகாப்பு மற்றும் சம்பளத்துடன் கூடிய லீவு

கர்ப்பம் தரித்தலுடன் தொடர்புடைய பாரபட்சம்காட்டலை இல்லாதொழிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். குறிப்பாக,

- கர்ப்பம் தரித்தல் அல்லது மகப்பேற்ற விடுமுறையின் அடிப்படையில் பதவி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்த்தல்
- திருமணம் முடிப்பதை அடிப்படையாகக் கொண்டு அநீதியான முறையில் பதவி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்த்தல்
- மகப்பேற்று விடுமுறை வழங்குதல்
- பிள்ளை பராமரிப்பு வசதிகள் உள்ளடங்கியதாக குடும்பக் கடப்பாடுடைய பெற்றோருக்கு உதவியளித்தலை ஊக்குவித்தல்
- கர்ப்பணிப் பெண்களுக்கு ஆபத்தான தொழில்களிலிருந்து விசேட பாதுகாப்பு வழங்குதல்

*"உங்களால் ஒரு தொழிலை அல்லது பொறுப்பை ஏற்க முடியுமா என்பது உங்களது மரபணுக்கள் அமைந்துள்ள விதத்தினால் தீர்மானிக்கப்படுவதில்லை."*

*- **பெலா அப்சுக்,** சட்டத்தரணி மற்றும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்*






## 12 வது - உறுப்புரை சுகாதார உரிமையை உறுதி செய்தல்

சுகாதாரப் பாதுகாப்புத்துறையில் பாரபட்சம்காட்டலை அரசு இல்லாதொழித்தல் அவசியமாகும். குடும்பக் கட்டுப்பாடு உள்ளடங்கலாக, சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகளை அணுகக்கூடிய சமவாய்ப்பு பெண்களுக்கு உறுதிசெய்யப்படுதல் வேண்டும். தேவைப்படுகின்றபோது இலவச சேவை உள்ளடங்கலாக, மகப்பேற்றடன் தொடர்புடைய பொருத்தமான சேவைகளைப் பெண்கள் பெறுவதையும், போதியளவு போசாக்கினையும் அரசு உறுதிசெய்தல் வேண்டும்.

*"மகப்பேற்றுச் சுகாதாரத்துறையில் நடைபெறுகின்ற முதலீடுகள் அதிக பிரதிபலன்களையும் உயர்ந்தளவு உற்பத்திறனையும் பெற்றுத்தரும் என்பதோடு பொருளாதார வளர்ச்சியையும் பெண்கள் உரிமைகளையும் மேம்படுத்தும்."*

*- **தொராயா அஹமட் ஒபைட்,** ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் 2001 - 2010*




## 13 வது - உறுப்புரை பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கைகான உரிமையை உறுதி செய்தல்

பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் பாரபட்சம்காட்டலை இல்லாதொழிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல் அவசியமாகும். குறிப்பாக, குடும்ப நலவுரிமைகள், வங்கிக் கடன்கள், ஈடுவைத்தல் மற்றும் ஏனைய வகையிலான கடன்கள், பொழுதுபோக்குகளில் பங்கேற்றல் மற்றும் கலாசார வாழ்க்கையின் அனைத்து தோற்றங்களுக்குமான உரிமைகளை உறுதி செய்தல் அவசியமாகும்.

*"பெண்கள் தொடர்ந்தும் நலனோம்புகை உதவிகளில் தங்கிவாழும் செயலிழந்த மக்கள் பிரிவினர் அல்ல. அவர்கள் ஆண்களுக்கு சரிசமமாக செயலூக்கம்மிக்க வகையில் செயலாற்றுகின்ற செயற்பாட்டாளர்களாக மாறிவருகின்றனர். பெண்களினதும் அதேபோன்று ஆண்களினதும் வாழ்க்கையை மாற்றியமைக்கின்ற சமூக மாற்றத்தை வளர்க்கின்ற பாரியதொரு சக்தியாக பெண்கள் மாறியுள்ளனர்."*

*- **அமர்த்யா சென்**, பொருளியல் நிபுணர் - 1998 நோபல் பரிசு பெற்றவர்.*






## 14 வது - உறுப்புரை கிராமிய பெண்களின் சம உரிமை உறுதிசெய்தல்

கிராமியப் பெண்களின் நிலைமை தொடர்பில் அரசு விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். பின்வருபவை தொடர்பில் கிராமியப் பெண்களின் சம உரிமையை அவை உறுதி செய்தல் வேண்டும்.

- அபிவிருத்தித் திட்டமிடலில் பங்கேற்றல்
- குடும்பக் கட்டுப்பாடு உட்பட சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகுதல்
- எழுத்தறிவுப் பயிற்சி உள்ளடங்கலாக, கல்வி மற்றும் பயிற்சியைப் பெறுதல்
- பொருளாதார வாய்ப்புகளை அடைவதற்கான குழுக்கள் மற்றும் கூட்டுறவை ஒழுங்கமைத்தல்
- சமுதாய செயற்பாடுகளில் பங்கேற்றல்

- கமத்தொழில் கடன்களுக்கான அணுகுதல்
- சந்தைப்படுத்தல் வசதிகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகுதல்
- வீடமைப்பு, நீர் வழங்கல் உள்ளடங்கலாக போதியளவு வாழ்க்கைத் தரத்தைப் பெறுதல்

*"சின்னச் சின்ன விடயங்கள் பல்லாயிரம் தடவைகள் நடைபெறுகின்ற போது அவை பாரிய விடயங்களாக மாறுகின்றன. அவை பலமான பொருளாதார அடிப்படைக்கு அத்திவாரமாக அமைகின்றன. பெண்களின் பங்களிப்போடு மேற்படி பொருளாதார அடிப்படைகள் கட்டியெழுப்பப்படுகின்றபோது அது சிறந்த சமூக பொருளாதார எதிர்காலத்திற்கு அத்திவாரமாக அமைகின்றது."*

*- **பேராசிரியர் முகம்மத் யூனூஸ்,** 1998 இல் நோபல் பரிசு பெற்றவர்.*







## 15 வது - உறுப்புரை சட்டத்தின் முன் சமத்துவம் அளித்தல்

சட்டத்தின் முன் பெண்களுக்கு சமத்துவம் அளிக்கப்படுவதை அரசு உறுதி செய்தல் வேண்டும். குறிப்பாக ஆணைப் போன்றே பெண்ணுக்கும் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதிலும், சொத்துக்களைப் பெறுவதிலும், சமமான சட்ட ஆற்றல் இருத்தல் வேண்டும் என்பதோடு நீதிமன்றங்களில் அவர்களுக்கு சமமான கவனிப்பு வழங்கப்படுதல் வேண்டும். பெண்களின் சட்ட ஆற்றலை மட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற எந்த ஒப்பந்தமும் வலுப்படுத்தப்படுதலாகாது. நாட்டினுள் நடமாடுவதற்கான மற்றும் வதிவிடத்தைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரம் பற்றிய சட்டங்கள் தொடர்பில் ஆணும் பெண்ணும் சமத்துவமாகக் கவனிக்கப்படுதல் வேண்டும்.

*"ஏதேனுமொரு இடத்தில் நடைபெறுகின்ற அநீதியானது உலகம்பூராவும் நீதிக்கு ஒரு அச்சுறுத்தலாகும்"*

*- **மார்டின் லூதர் கிங் ஜூனியர்***




## 16 வது - உறுப்புரை திருமணம் மற்றும் குடும்ப வாழ்வில் சமத்துவம்

திருமணம் மற்றும் குடும்ப வாழ்வில் பெண்களுக்கெதிரான பாரபட்சம்காட்டலை இல்லாதொழிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். குறிப்பாக பின்வரும் விடயங்களில் ஆணும் பெண்ணும் சம உரிமையை அனுபவிப்பதை அரசு உறுதி செய்தல் வேண்டும்.

- திருமணத்திற்கு உட்படுதல்
- துணைவரைத் தெரிவு செய்தல் மற்றும் திருமணத்திற்கான உடன்பாடு
- திருமணத்தின்போதுள்ள பொறுப்புகள்
- திருமணத்தைக் கலைத்தல்
- பெற்றோர்நிலைக்குரிய உரிமைகளும் பொறுப்புகளும்
- பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் பிள்ளைகளுக்கு இடையிலான இடைவெளி தொடர்பில் முடிவெடுத்தல்
- பொறுப்பாளர்நிலை மற்றும் தத்தெடுத்தல்
- குடும்பப் பெயர், உயர்தொழில் மற்றும் வாழ்க்கைத் தொழிலைத் தெரிவு செய்தல்



- சொத்துக்களின் உரிமையாளர்நிலை

திருமண உறுதி மற்றும் சிறுவர் திருமணங்களுக்கு சட்ட வலுவுடைமை இல்லையென்பதையும் திருமணங்களை உத்தியோகபூர்வ ரீதியில் பதிவு செய்வதைத் தேவைப்படுத்துகின்ற அதேவேளை திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதையும் அரசு உறுதி செய்தல் வேண்டும்.

*"மனைவி கணவனின் அடிமையல்ல. அவள் அவனது துணைவியும் நண்பியுமாவாள்"*
*- மகாத்மா காந்தி*

# பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல் சார் இணக்க உடன்படிக்கை

## அரசாங்கம் இவ் உடன்படிக்கையைச் சமர்ப்பிக்க

ஐக்கிய நாடுகளின் பட்டயம் அடிப்படை மனித உரிமைகளிலும், மனித நபரின் மேன்மையிலும், மதிப்பிலும், ஆண்கள் பெண்களின் சம உரிமைகளிலும் தனது விசுவாசத்தை மீளவலியுறுத்துகிறது என்பதைக் கவனித்தும்,

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், பாரபட்சம் காட்ட அனுமதிக்கப்பட முடியாதது எனும் கோட்பாட்டை வலியுறுத்துகிறது என்பதையும், மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவும், மேன்மையிலும் உரிமைகளிலும் சமமாகவும் பிறந்தவர்கள் என்பதுடன் பாலின் அடிப்படையில் வேறுபடுத்தல் உட்பட, எவ்வகையான வேறுபடுத்தப்படுதலுமின்றி பிரகடனத்தில் எடுத்துரைக்கப்பட்ட சகல உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உரித்தானவர்கள் என வெளிப்படுத்துகிறது என்பதனையும் கவனித்தும்,

மனித உரிமைகள் சார் சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தங்களுக்கான அரசியல், பொருளதார, சமூக, கலாசார, குடியியல், அரசியல் உரிமைகள் அனைத்தையும் அனுபவிப்பதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்குமுள்ள சம உரிமையை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளன என்பதனைக் கவனித்தும்,



ஆண்களினதும், பெண்களினதும் உரிமைகளின் சமத்துவத்தை ஊக்குவிக்கும் ஐக்கிய நாடுகளினதும், சிறப்பு முகவராண்மைகளதும் ஆதரவின் கீழ் முடிவு செய்யப்பட்ட சர்வதேச இணக்க உடன்படிக்கைகளைக் கருத்திற் கொண்டும்,

ஆண்களினதும், பெண்களினதும் உரிமைகளின் சமத்துவத்தை ஊக்குவிக்கும் ஐக்கிய நாடுகளாலும், சிறப்பு முகவராண்மைகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், பிரகடனங்கள், விதப்புரைகள் என்பவற்றையும் கவனித்தும்,

எனினும், வேறுபட்ட இச்சாதனங்களின் மத்தியிலும் பெண்களுக்கெதிரான பேதங்காட்டல் பரந்த அளவிற் தொடர்ந்தும் இருந்து வருவது குறித்து அக்கறை கொண்டும்,

பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களானது உரிமைகளின் சமத்துவம், மனித மேன்மைக்கு மதிப்பளித்தல் எனும் தத்துவங்களை மீறுதலையும் பெண்கள் தமது நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார வாழ்க்கையில் ஆண்களுடன் சம அடிப்படையில் பங்குபற்றுதலுக்குத் தடையாக இருப்பதையும் சமூகத்தினதும், குடும்பத்தினதும் வளமான வாழ்வின் வளர்ச்சியைத் தடை செய்து பெண்கள் தமது நாடுகளுக்கும் மனித இனத்துக்கும் ஆற்றும் சேவையில் அவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களின் முழுமையான அபிவிருத்தியை இடர்மிகுந்ததாக்குவதையும் நினைவிற் கொண்டும்,

ஏழ்மை நிலைமைகளில் உணவு, ஆரோக்கியம், கல்வி, பயிற்சி, தொழிலுக்கான வாய்ப்புகளும் பிறதேவைகளும் என்பவற்றை எய்துவதற்கான வழி பெண்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது என்பதிற் கரிசனை கொண்டும்,

புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கானது, ஒப்புரவு, நீதி என்பவற்றின் அடிப்படையில் தாபிக்கப்படுதல் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நல்கும் என நம்பிக்கை கொண்டும்,

ஆண்களினதும், பெண்களினதும் உரிமைகள் முழுமையாக அனுபவிக்கப்படுவதற்கு இனவொதுக்கம், இனவாதத்தின் சகல வடிவங்களும், இனபேதம், குடியேற்றவாட்சி, புதிய குடியேற்றவாதம், ஆக்கிரமிப்பு, நாட்டில் புறநாட்டவர் உறைதல், அரசுகளின் உண்ணாட்டு அலுவல்களில் அவர்களின் ஆதிக்கமும் தலையீடும் என்பவை ஒழிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது என அழுத்தமாகத் தெரிவித்தும்,

சர்வதேச அமைதியும் பாதுகாப்பும் பலப்படுத்தப்படுதல், சர்வதேச மன இழுவிசை தளர்வெய்துதல், அனைத்து அரசுகளிடையேயும் அவர்களது சமூக பொருளாதார முறைமைகள் எவ்வாறிருப்பினும் பரஸ்பர ஒத்துழைப்பு, பொதுவானதும் முழுமையானதுமான படைக்கலக் குறைப்பு, குறிப்பாகக் கண்டிப்பானதும் பயனுறுதிவாய்ந்ததுமான சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் அணுவாயுத ஒழிப்பு, நாடுகளிடையேயான தொடர்புகளில் நீதி, சமத்துவம், பரஸ்பர நன்மை எனும் கோட்பாடுகள் உறுதிப்படுத்தப்படுதல், அன்னியராதிக்கம், குடியேற்றவாதிக்கம், புறநாட்டவர் குடியேற்றம் என்பனவற்றின் கீழுள்ள மக்களின் சுயநிர்ணயத்திற்கும் சுதந்திரத்திற்குமான உரிமை, அத்துடன் தேசிய இறைமைக்கும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கும் மதிப்பளித்தல் ஆகியவை சமூக முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தும் என்பதையும் அதன் விளைவாக அவை ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் முழுமையான சமத்துவத்தின் அடைவிற்கு உதவும் என்பதையும் உறுதிப்படுத்தியும்,

ஒரு நாட்டின் முழுமையான வளர்ச்சி, உலகின் பொதுநலன், சமாதான இலக்கு என்பவை, அனைத்துக் களங்களிலும் ஆண்களுடன் சரிசம நிலையில் பெண்களின் உச்ச அளவிலான பங்குபற்றலை வேண்டி நிற்கும் என நம்பிக்கை கொண்டும்,

குடும்பத்தின் நலனுக்கும் சமூகத்தின் அபிவிருத்திக்கும் பெண்களின், இதுவரை முழுமையாக அடையாளங்கண்டு கொள்ளப்படாத பாரிய பங்களிப்பு, தாய்மைப்பேறின் சமூக முக்கியத்துவமும் குடும்பத்திலும் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதிலும் இரு பெற்றோர்களினதும் கடமைப்பங்கும் என்பவற்றை மனத்திற் கொண்டும், குழந்தைகளைப் பிறப்பிப்பதில் பெண்களின் கடமைக்கூறு பேதங்காட்டலுக்கு ஓர் அடிப்படையாக அமையக்கூடாது. ஆனால், குழந்தைகளை வளர்த்தெடுக்கும் பொறுப்பு முழு மொத்தமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமூகத்திற்குமிடையிலான பங்குபற்றலை வேண்டி நிற்கிறது என்பதை உணர்ந்தும்,

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் முழுமையான சமத்துவத்தை எய்துவதற்கு சமூகத்திலும், குடும்பத்திலும்

ஆண்களின் மரபுரீதியான கடமைப்பங்கிலும் அவ்வாறே பெண்களின் கடமைப்பங்கிலும் மாற்றமொன்று தேவையானது என்பதை உணர்ந்தும்,

பெண்களுக்கெதிரான பாரபட்சம் காட்டலை ஒழித்தல் குறித்து பிரகடனத்தில் எடுத்துரைக்கப்பட்ட தத்துவங்களைச் செயற்படுத்தவும் அந்நோக்கத்திற்காக, அத்தகைய பேதங்காட்டலை அதன் சகல வடிவங்களிலும் தோற்றப்பாடுகளிலும் ஒழிப்பதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் துணிந்தும்,

பின்வருவன தொடர்பில் இணங்கியுள்ளன.

## பகுதி I

### உறுப்புரை 1

தற்போதைய இணக்க உடன்படிக்கையின் நோக்கங்களுக்காக "பெண்களுக்கு எதிரான பாரபட்சம்" எனும் தொடர் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அல்லது வேறேதேனும் பரப்பில் பெண்களால், அவர்களது திருமணஞ்சார் தகுநிலை எவ்வாறிருப்பினும் ஆண்களும் பெண்களும் சமன் எனும் அடிப்படையில் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் அங்கீகரிக்கப்படுதல், அனுபவிக்கப்படுதல் அல்லது பிரயோகிக்கப்படுதலைப் பாதிக்கும் அல்லது பாலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வேறுபாடு காட்டுதல், விலக்குதல் அல்லது மட்டுப்படுத்துதல் என்பதைக் கருதும்.



### உறுப்புரை 2

அரசாங்கம் கட்சிகள் பெண்களுக்கெதிரான பாரபட்சம் காட்டலை அதன் அனைத்து வடிவங்களிலும் கண்டித்து, பொருத்தமான சகல வழிகள் மூலமும் தாமதமின்றியும் பெண்களுக்கெதிரான பாரபட்சம் காட்டலை ஒழிக்கும் கொள்கையொன்றை அனுசரித்துச் செல்வதற்கு இணங்கி, இந் நோக்கத்திற்காகப் பின்வரும் பொறுப்புகளை ஏற்றுள்ளன.

(அ) தமது தேசிய அரசியலமைப்புகளில் அல்லது பொருத்தமான பிற சட்டவாக்கங்களில் ஆண், பெண் சமத்துவ தத்துவம் இதுவரை சேர்த்துக் கொள்ளப்படாவிடின், அதனைச் சேர்த்துக் கொள்ளுதல் இத்தத்துவம் செயல் ரீதியில் உணர்ந்து கொள்ளப்படுவதைச் சட்டத்தினூடாகவும் பிறபொருத்தமான வழிகளினூடாகவும் உறுதிப்படுத்துதல்.

(ஆ) பெண்களுக்கு எதிரான சகல பாரட்சம் காட்டலைத் தடுப்பதற்கு பொருத்தமானவிடத்து தடைவிதிப்புகள் உட்பட தகுந்த சட்ட நடவடிக்கைகளையும் பிற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்

(இ) ஆண்களுடன் சம அடிப்படையில், பெண்களது உரிமைகளின் சட்ட ரீதியான பாதுகாப்பைத் தாபித்தலும், தகுதி வாய்ந்த தேசிய நியாய சபைகள், பிற பொது நிறுவனங்கள் என்பவற்றின் ஊடாக பேதங்காட்டும் எந்தச் செயலுக்கும் எதிராக பெண்களின் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

(ஈ) பெண்களுக்கு எதிரான ஏதேனும் பாரபட்சம் காட்டல் செயல் அல்லது பழக்கத்தில் ஈடுபடுவதிலிருந்து தம்மைத் தடுத்துக் கொள்தலும் இக்கடப்பாட்டுக்கு இசைவாக பொது அதிகாரிகளும் நிறுவனங்களும் செயற்படுவதை உறுதிப்படுத்துதல்.

(உ) எவரேனும் தனியாளினால் நிறுவகத்தினால் அல்லது தாளாண்மையினால் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் பாரபட்சம் காட்டலை நீக்குவதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுதல்.

(ஊ) பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டலைக் கொண்டமையும், தற்போதுள்ள சட்டங்கள், பிரமாணங்கள், வழமைகள், நடைமுறை ஒழுங்குகள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு சட்டவாக்கம் உட்பட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்

(எ) பெண்களுக்கெதிரான பாரபட்சம் காட்டலைக் கொண்டமையும், அனைத்துத் தேசிய தண்டனை ஏற்பாடுகளையும் செயலறச் செய்தல்

## உறுப்புரை 3

அரசு அனைத்துப் பரப்புகளிலும், குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரப் பரப்புகளில் ஆண்களுடன் சமத்துவ அடிப்படையில் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பிரயோகிப்பதற்கும் அனுபவிப்பதற்குமான உத்தரவாதத்தைப் பெண்களுக்கு வழங்கும் பொருட்டு, பெண்களின் முழு வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்துவதற்காக சட்டவாக்கம் உட்பட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும்.



## உறுப்புரை 4

1. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் உண்மைப்படியான சமத்துவத்தைத் துரிதப்படுத்து வதனை நோக்கமாகக் கொண்டு அரசால் தற்காலிக சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் தற்போதைய இணக்க உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி பாரபட்சம் காட்டலாகக் கருதப்பட மாட்டாது. ஆனால், எவ்வழியிலும் அதன் விளைவாக சமமற்ற அல்லது வேறான நியமங்கள் பாரபட்சம் காட்டலை உரிமை விதியாக்க முடியாது. வாய்ப்பிலும் நடத்துமுறையிலும் சமத்துவ நோக்கங்கள் அடையப் பெற்றதும் இந்நடவடிக்கைகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

2. தாய்மைப் பேற்றினைப் பாதுகாக்கும் நோக்குடன் அரசு தற்போதைய இணக்க உடன்படிக்கையில் அடங்கியிருக்கும் நடவடிக்கைகள் உட்பட, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் பாரபட்சம் காட்டுதல் எனக் கருதப்பட மாட்டாது.

## உறுப்புரை 5

அரசு பின்வரும் நோக்கங்களுக்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும்.

(அ) ஆண்கள், பெண்கள் ஒரு பாலாரின் இழிவு அல்லது உயர்வு நிலைக் கருத்தின் மீது அமைந்த அன்றேல் ஆண்களுக்கும் பெண்களுக்குமான மாற்றமில்லாக் கடமைக் கூறுகள் பற்றி அமைந்த, தப்பான எண்ணங்களையும், வழமையானதும் பிறவுமான அனைத்துச் செயல் முறைகளையும் நீக்கும் நோக்குடன் ஆண்களதும் பெண்களதும் சமூக, கலாசார நடத்தைக் கோலங்களை மாற்றியமைத்தல்

(ஆ) குடும்பக் கல்வியானது, சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே ஆதிமுதலான கருத்து என்பது விளங்கிக் கொள்ளப்பட்டு ஒரு சமூகத் தொழிற்பாடாக தாய்மைப் பேறு பற்றிய தகுந்த விளக்கத்தையும் தமது குழந்தைகளின் வளர்த்தெடுப்பிலும் விருத்தியிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான பொறுப்பு உண்டு எனும் அங்கீகாரத்தையும் உள்ளடக்குவதை உறுதிசெய்தல்.

## உறுப்புரை 6

அரசு பெண்களிலான வணிகத்தின் சகல வடிவங்களையும் அத்துடன் பெண்கள்சார் விபசாரம் தன்னயப்படுத்தப்படுதலையும் அடக்குவதற்காக



சட்டவாக்கம் உட்பட பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்.

# பகுதி II

## உறுப்புரை 7

அரசு ஒரு நாட்டின் அரசியல், போது வாழ்க்கையில், பெண்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டுதலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதுடன், ஆண்களுடன் சமமான நியதிகளில் குறிப்பாக பின்வருவனவற்றுக்கான உரிமைகளைப் பெண்களுக்கு உறுதிசெய்யும்.

(அ) அனைத்துத் தேர்தல்களிலும் பகிரங்க மக்கள் தீர்ப்பெடுத்தல்களிலும், வாக்களிப்பதற்கும் பகிரங்கமாகத் தெரிவுசெய்யப்படும் எல்லாக் குழுக்களுக்குமான தேர்தலில் நிற்கத் தகுதியுடையவராவர்.

(ஆ) அரசாங்கக் கொள்கையின் ஒழுங்குமுறைப்படுத்தலிலும் அதன் அமுலாக்கத்திலும் பங்குபற்றுவதற்கும் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும், பகிரங்கப் பதவி வகிப்பதற்கும் பகிரங்கக் கடமைகள் சகலதையும் நிறைவேற்றுவதற்கும்

(இ) நாட்டின் பொது, அரசியல் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கச் சார்பற்ற நிறுவகங்களிலும் சங்கங்களிலும் பங்குபற்றுவதற்கும்

## உறுப்புரை 8

அரசு ஆண்களுடன் சமமான நியதிகளிலும் பேதங்காட்டல் எதுவுமின்றியும் பெண்கள் சர்வதேச மட்டத்தில் தமது அரசாங்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்து நிற்பதற்கும் சர்வதேச நிறுவகங்களின் வேலையில் பங்குபற்றுவதற்குமான வாய்ப்பினை உறுதிசெய்யும் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

## உறுப்புரை 9

1. அரசு பெண்களுக்கு அவர்கள் தமது தேசிய இனத்தைத் தேடிப்பெறுவதற்கு, மாற்றுவதற்கு, அன்றேல் நிறுத்தி வைப்பதற்கு ஆண்களுடன் சமமான உரிமைகளை வழங்கும். குறிப்பாக அவை அந்நியரொருவருடனான திருமணமோ, திருமண வாழ்வுக் காலத்தில் கணவன் தனது தேசிய இனத்தை மாற்றிக்கொள்வதோ, கணவனை மனைவியின் தேசிய இனத்திற்கு மாற்றவோ, அவரை நாடற்றவராகச் செய்யவோ, கணவனின் தேசிய இனத்தை அவர் மீது திணிக்கவோ மாட்டாது என்பதை உறுதிசெய்யும்.

2. அரசு பெண்களுக்கு அவர்களது பிள்ளைகளின் தேசிய இனம் தொடர்பில் ஆண்களுடன் சமமான உரிமைகளை வழங்குதல்.

# பகுதி III

## உறுப்புரை 10

அரசு கல்வித்துறையில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டுதலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண்களுடன் பெண்களுக்குச் சமமான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், குறிப்பாக ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்குமாக எடுத்துக் கொள்ளும்.

(அ) தொழிலுக்கும் தொழில் வழிகாட்டலுக்கும் கிராமப்புறப் பிரதேசங்களிலும் அவ்வாறே நகர்ப்புற பிரதேசங்களிலும் அனைத்து வகைப்பட்ட கல்வித் தாபனங்களிலும் கல்வி கற்கைகளுள் நுழைவதற்கும் சான்றிதழ்களுக்கான தகைமையை அடைவதற்கும் ஒரே நிபந்தனைகள்ளு இச்சமத்துவம் பாடசாலை புகுமுன் கல்வி, பொதுக்கல்வி, தொழிற்கல்வி, உயர் தொழில்நுட்பக் கல்வி என்பவற்றிலும் அத்துடன் அனைத்து வகையான தொழிற் பயிற்சிகளிலும் உறுதிப்படுத்தப்படும்.

(ஆ) ஒரே பாடத்திட்டத்திற்கும், ஒரே வகையான பரீட்சைகளுக்கும், ஒரே தகுதியுடைய ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை வளங்களுக்கும் மற்றும் ஒரே தரத்தினைக் கொண்ட உபகரணங்களைப் பாவிப்பதற்கு வழியிருத்தல்.

(இ) கல்வியின் சகல மட்டங்களிலும் கல்வியின் அனைத்த வடிவங்களிலும் ஆண்களினதும் பெண்களினதும் கடமைக்கூறுகள் பற்றிய மாறாது நிலைபெற்ற ஏதேனும் எண்ணக்கருவை, ஆண், பெண் கூட்டுக்கல்வியையும் கல்வியின் பிற வகைகளையும் ஊக்குவிப்பதன் மூலமும் குறிப்பாக பாடநூல்களையும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களையும் மீளவாய்தல் மூலமும் கற்பித்தல் முறைகளை இசைவாக்கம் செய்வதன் மூலமும் நீக்குதல்

(ஈ) புலமைப் பரிசில்கள், கற்கைக்கான பிற கொடைகள் என்பவற்றின் மூலம் பயன்பெறுவதற்கும் ஒரே வாய்ப்புகள்

(உ) முதிர்ந்தோர்க்கு ஆனவையும் தொழிற்பாட்டுப் படிப்பறிவு சார்ந்தவையுமான நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட, குறிப்பாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் கல்வியில் காணப்படும் ஏதேனும் இடைவெளியை இயன்றளவு மிக முற்பட்ட வேளையில் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட தொடரும் கல்விக்கான நிகழ்ச்சித் திட்டங்களிற் பங்குபற்றுவதற்குச் சம வாய்ப்புகள்



(ஊ) மாணவியர் பாடசாலையை விட்டு விலகும் வீதங்களைக் குறைத்தலும் உரிய காலத்திற்கு முன் பாடசாலையை விட்டு விலகிய பெண்பிள்ளைகளுக்கும் பெண்களுக்குமான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தலும்

(எ) விளையாட்டிலும் உடற்கல்வியிலும் தீவிரமாகப் பங்குபற்றுவதற்கான ஒரே வாய்ப்புகள்

(ஏ) குடும்பங்களின் உடனலத்தையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்த உதவுவதற்கு குடும்பத் திட்டம் பற்றிய ஆலோசனையும் தகவல்களும் உட்பட தனிப்பட்ட கல்வித் தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பு

## உறுப்புரை 11

1. அரசு தொழிற்பரப்பில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் ஒரே உரிமைகளை குறிப்பாக பின்வருவனவற்றைப் பெண்களுக்கு உறுதிப்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளும்.

   (அ) அனைத்து மனிதர்களதும் பராதீனப்படுத்த முடியாத உரிமையாக வேலை செய்வதற்கான உரிமை

(ஆ) தொழில் விடயங்களில் தெரிவுக்கான ஒரே கட்டளை விதிகளின் பிரயோகம் உட்பட ஒரே தொழில் வாய்ப்புகளுக்கான உரிமை

(இ) உயர் தொழில், தொழில் ஆகியவற்றைச் சுதந்திரமாகத் தெரிவுசெய்வதற்கான உரிமை, பதவி உயர்ச்சி, வேலைப் பாதுகாப்பு, சகல சேவை நலன்களும் நிபந்தனைகளும் என்பவற்றுக்கான உரிமை, தொழில்பயிலுனர் பயிற்சி, உயர் வாழ்க்கைத்தொழிற் பயிற்சி, மீண்டுவரும் பயிற்சி என்பவை உட்பட தொழிற்பயிற்சியையும் மீள்பயிற்சியையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமை

(ஈ) சம நலன்கள் உட்பட சம ஊதியத்திற்கான உரிமையும் சமபெறுமானமுடைய வேலை தொடர்பில் சமநடத்துகைக்கான உரிமையும் அத்துடன் வேலையினது பண்புத்தர மதிப்பீட்டில் சமத்துவமான நடத்துகையும்

(உ) ஓய்வுபெறல், தொழிலின்மை, சுகயீனம், நோய்வாய்ப்பட்ட நிலை, வயோதிபம் அத்துடன் வேலை செய்ய இயலாமை எனும் குறிப்பான சந்தர்ப்பங்களில் சமூகப் பாதுகாப்புக்கான உரிமையும் மேலும் வேதனத்துடன் லீவு பெறுதற்கான உரிமையும்



(ஊ) இனப்பெருக்கத் தொழிற்பாட்டைப் பாதுகாத்தல் உட்பட உடனலப் பாதுகாப்பிற்கும் வேலை நிலைமைகளில் இடர்காப்பிற்குமான உரிமை

2. விவாகம் அல்லது தாய்மைப்பேற்றின் அடிப்படையில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டலைத் தடுப்பதற்கும் வேலை செய்வதற்கான பயனுறுதி வாய்ந்த உரிமையை உறுதிப்படுத்துவதற்குமாக அரசு பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

(அ) கர்ப்பநிலை அல்லது பிரசவ விடுமுறை காரணமாக, வேலைநீக்கஞ் செய்தலையும் திருமணஞ்சார் நிலையின் அடிப்படையில் வேலை நீக்கத்தில் பாரபட்சம் காட்டுதலையும் பிரமாணங்களை விதித்தலுடன் தடைசெய்தல்.

(ஆ) முன்னைய தொழில், சிரேட்ட நிலை அல்லது சமூகச் சலுகைகள் என்பவற்றின் இழப்பின்றி வேதனத்துடன் அல்லது ஒப்பிடத்தக்க சமூக நலன்களுடன் பிரசவ விடுமுறை அறிமுகப்படுத்துதல்.

(இ) பெற்றோர் குடும்பக் கடப்பாடுகளை வேலைப் பொறுப்புகளுடன் இணைப்பதற்கும் பொதுவாழ்வில் பங்குபற்றுவதற்கும் உதவுவதற்கு அவசியமான சமூக சேவைகள் வழங்கப்படுதலை, குறிப்பாக

குழந்தைக் கவனிப்பு வசதிகளின் வலையமைவொன்றைத் தாபித்து விருத்தி செய்வதனூடாக ஊக்குவித்தல்

(ஈ) கர்ப்பகாலத்தில் பெண்களுக்குத் தீங்கு பயப்பதாக நிறுவப்பட்ட வேலைவகைகளில், அவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பை வழங்குதல்

3. இவ்வுறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான பாதுகாப்புக்குரிய சட்டவாக்கம் காலத்துக்குக் காலம் விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவின் அடிப்படையில் மீளவாராயப்பட்டுத் திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அன்றேல் அவசியமாயின் விரிவுபடுத்தப்படலாம்.

## உறுப்புரை 12

1. அரசு உடனலக் கவனிப்புப் பரப்பிலே, பெண்களுக்கு எதிரான பாராபட்சம் காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் குடும்பத்திட்டமிடற் சேவைகள் உட்பட உல் கவனிப்புச் சேவைகளைப் பெண்கள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளும்.

2. இவ்வுறுப்புரையின் பந்தி ஐ இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அரசு பெண்களுக்கு, கர்ப்ப நிலை, பிரசவம், பிரசவத்திற்குப் பிற்பட்ட காலம் என்பவற்றுடன் தொடர்புபட்ட பொருத்தமான சேவைகளை, அவசியமான பொழுது இலவசச் சேவைகளையும் அத்துடன் கர்ப்ப காலத்தின் போதும் பால் சுரக்கும் காலத்திலும் போதுமான போஷனையையும் வழங்கி உறுதிப்படுத்தும்.



## உறுப்புரை 13

அரசு சமூக பொருளாதார வாழ்வின் பிற பரப்புகளிலே, பெண்களுக்கு எதிரான பாராபட்சம் காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் ஒரே உரிமைகளை, குறிப்பாகப் பின்வருவனவற்றை அவர்களுக்கு உறுதிப்படுத்தும் பொருட்டு எடுத்துக் கொள்ளும்.

(அ) குடும்ப நலன்களுக்கான உரிமை

(ஆ) வங்கிக் கடன்களுக்கும் ஈடுகளுக்கும் நிதிக்கடனின் பிறவகைகளுக்குமான உரிமை

(இ) பொழுதுபோக்குச் செயற்பாடுகள், விளையாட்டு, கலாசார வாழ்க்கையின் சகல அம்சங்களும் என்பவற்றில் பங்குபற்றுவதற்கான உரிமை

1. அரசு, கிராமியப் பெண்கள் எதிர்நோக்கும் குறிப்பான பிரச்சினைகளையும் பொருளாதாரத்தின் பணமாகச் செலவிடப்படாத துறைகளிலான அவர்களது பணி உட்பட, தமது குடும்பத்தின் பொருளாதாரப் பிழைப்பில் கிராமியப் பெண்கள் வகிக்கும் குறிப்பிடத்தக்க கடமைக் கூறுகளையும் கருத்திற்கொண்டு, இவ்விணக்க உடன்படிக்கையின் ஏற்பாடுகள் கிராமப்புறப் பிரதேசங்களிலுள்ள பெண்களுக்குப் பிரயோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

2. அரசு கிராமப்புறப் பிரதேசங்களில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும், ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் அவர்கள் கிராமிய அபிவிருத்தியில் பங்குபற்றி அதிலிருந்து நன்மையடைவதை உறுதிப்படுத்துவதற்காக எடுத்துக் கொள்வதுடன் குறிப்பாக, அத்தகைய பெண்களுக்குப் பின்வருவனவற்றுக்கான உரிமையையும் உறுதிசெய்யும்.

(அ) அபிவிருத்தித் திட்டமிடலின் விரிவு படுத்துதலிலும் அமுலாக்கத்திலும் சகல மட்டங்களிலும் பங்குபற்றுதல்

(ஆ) குடும்பத் திட்டமிடலில் தகவல்கள், அறிவுரை வழங்கல், சேவைகள் என்பவை உட்பட போதுமான உடனலக் கவனிப்பு வசதிகளுக்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல்

(இ) சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து நேரடியாகப் பயனடைதல்

(ஈ) அவர்கள் தமது தொழில்நுட்பத் தேர்ச்சியை விருத்தி செய்வதற்காக தொழிற்பாட்டு எழுத்தறிவுடைமை, அத்துடன், அனைத்துச் சமுதாய, விரிவாக்கச் சேவைகளினதும் பயன் என்பவற்றுடன் தொடர்புபட்டவை உட்பட, நியமமானதும் நியமமற்றதுமான அனைத்து வகையான பயிற்சியையும் கல்வியையும் பெற்றுக்கொள்ளுதல்

(உ) தொழில் அல்லது சுயதொழில் ஊடாக பொருளாதார வாய்ப்புகளை சமநிலையில் பெற்றுக்கொள்வதற்காக சுய உதவிக் குழுமங்களையும் கூட்டுறவு அமைப்புகளையும் ஒழுங்கமைப்புச் செய்தல்

(ஊ) சமுதாயச் செயற்பாடுகள் அனைத்திலும் பங்குபற்றல்

(எ) விவசாயக் கொடுகடனும் கடன்களும், சந்தைப்படுத்தல் வசதிகள், பொருத்தமான தொழில் நுணுக்கம் என்பவற்றைப் பெறுதற்கான வாய்ப்பும் காணி,

கமநலச் சீர்திருத்தம் அத்துடன் காணி மீள்குடியேற்றத் திட்டங்கள் என்பவற்றில் சமமான நடத்துகையும்

(ஏ) குறிப்பாக வீடமைப்பு, சுகாதாரம், மின்சாரம், நீர்வழங்கல், தொடர்பாடல் வசதிகள் என்பவை தொடர்பில் போதுமான வாழ்க்கை நிலைமைகளைத் துய்த்தல்

## பகுதி IV

### உறுப்புரை 15

1. அரசு, பெண்களுக்குச் சட்டத்திற்கு எதிரே ஆண்களுடன் சமத்துவம் வழங்கும்

2. அரசு, குடியியல் விவகாரங்களில், ஆண்களுக்கு சர்வசமனான ஒரு சட்டத் தகுதியையும் அத்தகுதியைப் பிரயோகிப்பதற்கான அதே வாய்ப்புகளும் பெண்களுக்கு வழங்கும். குறிப்பாக அவை, பெண்களுக்கு ஒப்பந்தங்களை முடிப்பதற்கும் சொத்துகளை நிர்வகிப்பதற்கும் சமமான உரிமைகளை வழங்கி நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் நடைமுறைகளின் சகல கட்டங்களிலும் அவர்களைச் சமமாக நடத்துதல்.

3. அரசு, பெண்களின் சட்டத் தகுதியை மட்டுப்படுத்துவதன்பால் நெறிப்படுத்தப்பட்ட சட்ட விளைவுடன்கூடிய, அனைத்து ஒப்பந்தங்களினதும் அனைத்துப் பிற தனியார் சாதனங்களினதும் எவ்வகையும், வெற்றும் வறிதுமானதாகக் (சட்டப்படி முற்றிலும் செல்லுபடியற்றதாகக்) கருதப்படுமென உடன்படுகின்றன.

4. அரசு, ஆட்களின் நகர்வுடனும் அவர்கள் தமது வதிவிடத்தையும் வாழிடத்தையும் தெரிவு செய்வதற்கான சுதந்திரத்துடனும் சம்பந்தப்பட்ட சட்டம் தொடர்பில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே உரிமைகளை வழங்கும்.

### உறுப்புரை 16

1. அரசு, விவாகத்துடனும் குடும்பத் தொடர்புகளுடனும் சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களிலும் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டலை ஒழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதுடன், குறிப்பாக, ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் பின்வருவனவற்றை உறுதிசெய்யும்.

(அ) திருமணம் செய்வதற்கான ஒரே உரிமை

(ஆ) சுதந்திரமாக வாழ்க்கைத் துணை ஒருவரைத் தெரிவு செய்வதற்கும், தமது சுதந்திரமான மற்றும் முழுமையான சம்மதத்துடன் திருமணம் செய்யும் உரிமை

(இ) திருமண வாழ்வுக் காலத்திலும் அது கலைக்கப்படும் போதும் உரிமைகளும் பொறுப்புக்களும்

(ஈ) அவர்களது திருமணஞ்சார் தகுநிலை எதுவாக இருப்பினும் அவர்களது பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பெற்றோர் எனும் முறையில் உரிமைகளும் பொறுப்புகளும், சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே முதன்மை பெறுதல்.

(உ) தமது பிள்ளைகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளுக்கு இடையிலான கால இடைவெளியையும், சுயாதீனமாகவும் பொறுப்புடனும் தீர்மானிப்பதற்கும் இவ்வுரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அவர்களுக்கு உதவும் தகவல்கள், கல்வி, வழிவகைகள் என்பவற்றை எய்துவதற்கும் உரிமைகள்

(ஊ) பிள்ளைகளின் பாதுகாவல், கண்காணிப்பு, நம்பிக்கைப் பொறுப்பாண்மை, மகவேற்பு அல்லது தேசிய சட்டவாக்கத்தில் இவ் எண்ணக்கருக்கள் நிலவும் ஒத்த நிறுவகங்கள் என்பவை தொடர்பில் ஒரே உரிமைகளும் பொறுப்புகளும், சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே முதன்மை பெறும்



(எ) குடும்பப் பெயர், உயர்தொழில், தொழில் என்பவற்றைத் தெரிவு செய்வதற்கான உரிமை உட்பட, கணவனும் மனைவியும் எனும் முறையில் ஆள்சார் உரிமைகள்

(ஏ) தம்பதியர்கள் இருவருக்கும் சொத்தின் உடைமை, கொள்ளல், முகாமை, நிர்வாகம், துய்த்தல், கட்டணமின்றியோ பெறுமானமுடைய பிரதிபலனுக்கோ முடிபு செய்தல் என்பவை தொடர்பில் ஒரே உரிமைகள்

2. பிள்ளைப் பருவ விவாக நிச்சயதார்த்தமும் விவாகமும், சட்டப்பயனைக் கொண்டிரா என்பதுடன், விவாகம் செய்வதற்கான இழிந்த வயதைக் குறித்துரைப்பதற்கும் அரச கருமப் பதிவகம் ஒன்றில் விவாகங்கள் பதிவு செய்யப்படுதலைக் கட்டாயமாக்குவதற்கும் சட்டவாக்கம் உட்பட, அவசியமான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்படும்.

## பகுதி V

### உறுப்புரை 17

1. தற்போதைய இணக்க உடன்படிக்கையைச் செயற்படுத்துவதில் எய்தப்படும் முன்னேற்றத்தைக் கருதுவதற்காக பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டலை ஒழிப்பதற்கான குழுவொன்று (இதன் பின்னர் குழுவெனக் குறிப்பிடப்படும்) இணக்க உடன்படிக்கை வலுவிற் புகும் வேளையில்,

இணக்க உடன்படிக்கையில் அடங்கும் பரப்பில் உயர் ஒழுக்கத் தகுநிலையையும், தகுதியையும் கொண்ட பதினெட்டு நிபுணர்களையும் அது வலுவாக்கம் செய்யப்பட்டதன் பின் அல்லது இணக்க உடன்படிக்கைக்கு முப்பத்தைந்தாவது அரசு சேர்க்கப்பட்டதன் பின் இருபத்து மூன்று நிபுணர்களையும் கொண்டதாகத் தாபிக்கப்படும். நிபுணர்கள் அரசு அவர்களது தேசிய இனத்தவர்களின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு தமது சொந்த ஆற்றலின் பேரில் சேவையாற்றுவர். தெரிவில் முறைமையான புவியியற் பரம்பலுக்கும் வேறுபட்ட நாகரீக வடிவங்களினதும் அத்துடன் பிரதான சட்ட முறைமைகளினதும் பிரதிநிதித்துவத்திற்கும் மதிப்புக் கொடுக்கப்படும்.

2. குழுவின் உறுப்பினர்கள், அரசு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நபர்களின் பட்டியல் ஒன்றிலிருந்து இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவர். அரசு, ஒவ்வொன்றும் தனது சொந்தத் தேசிய இனத்தவர்கள் மத்தியிலிருந்து நபரொருவரைப் பெயர் குறித்து நியமிக்க முடியும்.

3. முதலாவது தேர்தல் தற்போதைய இணக்க உடன்படிக்கை வலுவினுற் புகுந்த தேதிக்கு ஆறு மாதங்களின் பின் நடத்தப்படும். தேர்தல் ஒவ்வொன்றுக்குமான தேதிக்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு முன்பேனும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அரசு இரு மாதங்களுக்குள் அவர்களது பெயர் குறித்த நியமனங்களை சமர்ப்பிக்கும்படி அழைப்பு விடுக்கும் கடிதமொன்றை முகவரியிட்டு அனுப்புவார். செயலாளர் நாயகம் அரசு, இவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அனைத்து நபர்களினதும் நெடுங்கணக்கு எழுத்தொழுங்கில் அமைந்த பெயர்ப்பட்டியல் ஒன்றை அவர்களைப் பெயர் குறித்து நியமித்த அரசு கட்சிகளைக் குறிப்பிட்டுச் சமர்ப்பிப்பார்.

4. குழுவின் உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் செயலாளர் நாயகத்தினால் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் கூட்டப்படுகின்ற அரசு கட்சிகளின் கூட்டமொன்றில் நடத்தப்படும். அரசு கட்சிகளின் மூன்றில் இரு பங்கு தாழ்வெண்ணிக்கையாக (Quorum) இருக்க வேண்டிய அக் கூட்டத்தில் குழுவிற்குத் தெரிவு செய்யப்படும் நபர்கள் மிகப் பெரும் எண்ணிக்கையான வாக்குகளையும் கூட்டத்திற்குச் சமூகமளித்து வாக்களிக்கும் அரசு கட்சிகளினது பிரதிநிதிகளின் பூரண பெரும்பான்மை வாக்குகளையும் பெற்று நியமிக்கப்படுபவர்களாவர்.

5. குழுவின் உறுப்பினர்கள் நான்கு ஆண்டுக் காலத்திற்குத் தெரிவுசெய்யப்படுவர். எனினும், முதலாவது தேர்தலின் போது தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களில் ஒன்பது பேரின் கால எல்லை

இரு ஆண்டுகளின் இறுதியில் முடிவடையும். முதலாவது தேர்தலின் உடன்பின்னதாக அந்த ஒன்பது உறுப்பினர்களினதும் பெயர்கள் குழுவின் தவிசாளரினால் நிர்வாக சபை மூலம் தெரிவுசெய்யப்படும்.

6. குழுவின் மேலதிக ஐந்து உறுப்பினர்களின் தேர்தல் இந்த உறுப்புரையின் 2ஆம், 3ஆம், 4ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு அமைய முப்பத்து ஐந்தாவது வலுவாக்கத்தினை (முறையேற்பினை) அன்றேல் அரசின் சேர்வினைத் தொடர்ந்து நடத்தப்படும். இச் சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட மேலதிக உறுப்பினர்களுள் இருவரின் கால எல்லை இரு ஆண்டுகளின் இறுதியில் முடிவுறும். இந்த இரு உறுப்பினர்களினதும் பெயர்கள் குழுவின் தவிசாளரினால் நிர்வாக சபை மூலம் தெரிவு செய்யப்பட்டவையாகும்.

7. அமய வெற்றிடங்களை நிரப்புவதற்கு குழுவின் உறுப்பினராகத் தொழிற்படுதல் முடிவுற்ற நிபுணரின் அரசு கட்சி தனது தேசிய இனத்தவர்களுள் இன்னுமொரு நிபுணரைக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட நியமிக்க முடியும்.

8. குழுவின் உறுப்பினர்கள், பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் குழுவினது பொறுப்புகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு சபை தீர்மானிக்கும் அந் நியதிகள், நிபந்தனைகள்



மீது ஐக்கிய நாடுகளின் வளங்களிலிருந்து வரும்படிகளைப் பெற்றுக்கொள்வர்.

9. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தற்போதைய இணக்க உடன்படிக்கையின் கீழ் குழுவின் தொழிற்பாடுகள் பயனுறுதி வாய்ந்த முறையில் நிறைவேற்றப்படுவதற்கு அவசியமான பணியாளர்களையும் வசதிகளையும் வழங்கும் ஏற்பாட்டினைச் செய்வார்.

## உறுப்புரை 18

1. அரசு ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம், குழுவினால் ஆழ்ந்தாராயப்படுவதற்கென, தற்போதைய இணக்க உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தாம் மேற்கொண்டுள்ள சட்டவாக்க, நீதிமுறை, நிர்வாக அல்லது பிற நடவடிக்கைகள் பற்றியதும் இது தொடர்பில் எய்தப்பட்ட முன்னேற்றத்தைப் பற்றியதுமான அறிக்கை ஒன்றினைப் பின்வரும் கால எல்லைகளில் சமர்ப்பிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும்.

   (அ) சம்பந்தப்பட்ட அரசு, இணைந்து ஓராண்டு காலத்தின் பின்னர் சேருதல்.

   (ஆ) அதன் பின்னர் குறைந்தபட்சம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மேலும் குழு வேண்டிக் கொள்ளும் அவ்வப் பொழுதுகளிலும்

2. அறிக்கைகள், தற்போதைய இணக்க உடன்படிக்கையின் கீழ் கடப்பாடுகளின் நிறைவேற்றத்தின் அளவைப் பாதிக்கும் காரணிகளையும் இடர்பாடுகளையும் எடுத்துக்காட்ட முடியும்.

## உறுப்புரை 19

1. குழு தனது சொந்த நடைமுறை விதிகளைக் கைக்கொள்ள முடியும்.

2. குழு தனது உத்தியோகத்தர்களை ஈராண்டுக் காலத்திற்குத் தெரிவுசெய்யும்.

## உறுப்புரை 20

1. குழு ஒவ்வோராண்டும் இயல்பாக இரு வாரங்களுக்கு மேற்படாத காலத்திற்கு, தற்போதைய இணக்க உடன்படிக்கையின் 18ஆம் உறுப்புரைக்கமையச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை ஆழ்ந்தாராயும் பொருட்டுக் கூட முடியும்.

2. குழுவின் கூட்டங்கள் இயல்பாக ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் அன்றேல் குழுவினால் தீர்மாணிக்கப்படும் வசதியான பிறிதோரிடத்தில் நடத்தப்படலாம்.



## உறுப்புரை 21

1. குழு, பொருளாதார சமூக கழகத்தினூடாக ஒவ்வொரு ஆண்டும் தனது செயற்பாடுகள் பற்றி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு அறிக்கை செய்வதுடன், அரசு கிடைக்கப் பெற்ற அறிக்கைகளினதும் தகவல்களினதும் பரிசீலனையின் அடிப்படையில் பிரேரணைகளையும் பொதுவான விதப்புரைகளையும் வழங்க முடியும். அத்தகைய பிரேரணைகளும் பொதுவான விதப்புரைகளும் அரசுகளாம் கட்சிகளிடமிருந்தான கருத்துரைகள் எவையேனும் இருப்பின், அவற்றுடன் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

2. செயலாளர் நாயகம் குழுவின் அறிக்கைகளை, பெண்களின் நிலைசார் ஆணைக்குழுவிற்கு தகவலறிவிப்பின் பொருட்டு அனுப்பி வைப்பார்.

## உறுப்புரை 22

சிறப்பு முகவராண்மைகள், தற்போதைய இணக்க உடன்படிக்கையினது ஏற்பாடுகளின் செயல் நிறைவேற்றம் பற்றிய ஆய்வில், தமது செயற்பாடுகளின் விரிவினுள் அடங்குபவை தொடர்பில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு உரித்துடையவையாகும். குழு, இணக்க உடன்படிக்கையின் செயல் நிறைவேற்றம் தொடர்பில் சிறப்பு முகவராண்மைகளிடம் அவற்றினது செயற்பாடுகளின் விரிவினுள் இடம்பெறும் பரப்புகளில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி அழைப்பு விடுக்க முடியும்.

## பகுதி VI

### உறுப்புரை 23

இவ்விணக்க உடன்படிக்கையிலுள்ள எதுவும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவத்தை அடைவதற்குக் கூடுதலாக உதவக்கூடிய பின்வருவனவற்றிலான ஏற்பாடுகள் எவற்றையும் பாதிக்க மாட்டாது.

(அ) அரசின் சட்டத்தில் இடம்பெறுதல்.

(ஆ) அரசு வலுவிலுள்ள வேறு ஏதேனும் இணக்க உடன்படிக்கை அல்லது உடன்பாடு

### உறுப்புரை 24

அரசு தற்போதைய இணக்க உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளின் முழுமையான நிறைவேற்றத்தை அடைவதை நோக்கமாகக் கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் சர்வதேச மட்டத்தில் எடுத்துக் கொள்ளும் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றன.

### உறுப்புரை 25

1. தற்போதைய இணக்க உடன்படிக்கை அனைத்து அரசுகளும் கையொப்பமிடுவதற்குத் திறந்துவிடப்படும்.



2. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தற்போதைய இணக்க உடன்படிக்கையாம் வைப்பின் காப்பாளராகப் பதவிப்பெயர் அளிக்கப்பட்டுள்ளார்.

3. தற்போதைய இணக்க உடன்படிக்கை வலுவாக்கம் செய்யப்படுவதற்கு (முறையேற்புக்கு) உட்பட்டதாகும். வலுவாக்கம் செய்தற் சாதனங்கள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் செய்யப்படும்.

4. தற்போதைய இணக்க உடன்படிக்கை அனைத்து அரசுகளும் சேர்ந்து கொள்வதற்குத் திறந்து விடப்படும். சேர்தற் சாதனமொன்றை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் செய்வதன் மூலம் நிறைவேற்றப்படும்.

### உறுப்புரை 26

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு முகவரியிட்ட எழுத்திலான ஓர் அறிவிப்பின் மூலம் எந்த வேளையிலும், எந்த ஓர் அரசாலும் தற்போதைய இணக்க உடன்படிக்கையின் மீளாய்விற்கான வேண்டுகோள் விடுக்கப்படலாம்.

2. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை, அத்தகைய ஒரு வேண்டுகோள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவையேனும் இருப்பின், அவை பற்றித் தீர்மாணிக்கும்.

## உறுப்புரை 27

1. தற்போதைய இணக்க உடன்படிக்கை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் இருபதாவது வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்ட தேதியின் பின்னர் முப்பதாம் நாளன்று வலுவிற் புகும்.

2. இருபதாவது வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்டதன் பின், தற்போதைய இணக்க உடன்படிக்கையை வலுவாக்கம் செய்யும் அல்லது அதிற் சேரும் ஒவ்வொரு அரசுக்கும் இவ்விணக்க உடன்படிக்கை அதன் சொந்த வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்ட தேதியின் பின்னர் முப்பதாம் நாளன்று வலுவிற் புகும்.

## உறுப்புரை 28

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், வலுவாக்கம் செய்யும் அல்லது சேரும் வேளையில் அரசுகளினால் செய்யப்படும் காப்பொதுக்கல்களின் (Reservations) உரை மூலத்தைப் பெற்று அனைத்து நாடுகளுக்கும் அதனை அறிவிப்பார்.

2. தற்போதைய இணக்க உடன்படிக்கையின் குறிக்கோளுடன் அல்லது நோக்கத்துடன் ஒவ்வாத காப்பொதுக்கலொன்று அனுமதிக்கப்படமாட்டாது.

3. காப்பொதுக்கல்கள் எந்த வேளையிலும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கு முகவரியிட்ட, நீக்க விளைவினைக் கொண்ட அறிவிப்பின் மூலம் மீள அகற்றப்படலாம். செயலாளர் நாயகம் அது பற்றி அனைத்து நாடுகளுக்கும் அறிவிப்பார். அத்தகைய அறிவிப்பு, அது கிடைக்கப்பெற்ற தேதியன்று செல்லுபடியாகும் தன்மைபெறும்.

## உறுப்புரை 29

1. தற்போதைய இணக்க உடன்படிக்கையின் பொருள்கோடல் அல்லது பிரயோகம் தொடர்பாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசு கட்சிகளுக்கிடையில் தோன்றி, இணக்கப்பேச்சின் மூலம் தீர்க்கப்படாத பிணக்கு எதுவும் அவர்களுள் ஒருவரின் வேண்டுகோளின் பேரில் நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்படலாம். நடுத்தீர்ப்புக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கட்சிகள் நடுத்தீர்ப்புக்கான நிறுவகம் பற்றி இணங்க முடியாதிருப்பின் அக்கட்சிகளுள் ஏதேனுமொன்று நீதிமன்ற நியதிச்சட்டத்திற்கு இணங்க, வேண்டுகோளின் மூலம் சர்வதேச நீதிமன்றத்திற்கு பிணக்கினைமாட்டெறிய முடியும்.

2. இவ்விணக்க உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடும் அல்லது அதனை வலுவாக்கம் செய்யும் அல்லது அதிற் சேரும் வேளையில் அரசாம் கட்சி ஒவ்வொன்றும் இவ்வுறுப்புரையின் பந்தி 1இனால்

தான் கட்டுப்படுத்தப்படுவதாகக் கருதவில்லை எனப் பிரகடனம் செய்ய முடியும். அத்தகைய காப்பொதுக்கலொன்றைச் செய்துள்ள அரசாம் கட்சி தொடர்பில், ஏனைய அரசுகளாம் கட்சிகள் அப் பந்தியினால் கட்டுப்பட்டவையாகா.

3. இவ்வுறுப்புரையின் 2ஆம் பந்திக்கமையக் காப்பொதுக்கலொன்றைச் செய்துள்ள எந்த அரசாம் கட்சியும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கு விடுக்கும் அறிவிப்பு ஒன்றின் மூலம் அக்காப்பொதுக்கலை எந்த வேளையிலும் மீள அகற்ற முடியும்.

## உறுப்புரை 30

அதிகாரபூர்வ நிலையிற் சமனான சீன, ஆங்கில, பிரான்சிய, ரஸ்ய, ஸ்பானிய உரைமூலங்களைக் கொண்ட இவ்விணக்க உடன்படிக்கை, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் செய்யப்படும்.